[Registered No. M.—329.

VOL. I. JUNE 1902. No. 2.

THE

Suguna Sundaram.

A MONTHLY TAMIL JOURNAL.

சுகுணசுந்தரம்.

(மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை)

"சற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாராநெறி."—குறள்.

CONTENTS.	PAGE.
1 Thirthapuri.	26
2 Partiality & Treachery amoung brothers or Scandal from friendship towards female sex.	32
3 Mendicants. ...	38
4 General news ...	45
5 Kathaprasangam. ...	47

அட்டவணை.	பக்கம்.
1 தீர்த்தபுரி	26
2 பக்ஷபாதமும் பிராதுரு துரோகமும், அல்லது பிறமாதர் நட்பினுண்டாகு நிந்தை	32
3 இரவலர் ...	38
4 சமாசாரக்குறிப்புகள் ...	45
5 கதாபிரசங்கம் ...	47

Published by

T. P. VISWANATHA PILLAI, TAMIL PANDIT.

TURAIYUR.

Yearly Subscription Rs. 3—0—0

Half Yearly Subscription. Rs. 1—12—0.

All Rights Reserved.

Printed by the Managing Proprietor, T. S. SUBBARAMA AIYER,
AT THE DODSON PRESS, TRICHINOPOLY.

LIST OF GENTLEMEN WHO PATRONIZE THE SUGNA SUNDARAM.

1 Sri Ambalavana Desikar, Pandara Swamigal Sannithi, Thirnvavaduduŗai.
2 Sri Chithambara Sivaprakasa Swamigal, Turaiyur.
3 M. R. Ry. Prasanna Venkatachalla Reddi Garu, Zemindar of Turaiyur.
4 ,, A. Ganapathy Iyer Avl., Sub-Registrar of Turaiyur.
5 ,, Srinivasa Aiyengar Avl., B. A.. Sub Magistrate, Turaiyur.
6 ,, V. Srinivasachariyar Avl., B. A., Sub Registrar, Dharapuram.
7 ,, P. S. Venkatasubramania Asyar Avl., B. A., Stationery Sub-Magistrate, Trichinopoly.
8 ,, T. A. Swaninatha Iyer Avl., B. A., S. H. O., Padalur,
9 ,, T. K. Guruswami Aiyer Avl., 1st Assistant, Board Middle School, Tirucoilur.
10 Brahma Sri Paramesvara Dhekshathar Avl., Chidambaram.
11 ,, Venugopala Sastrigal Avl., Sanskrit Paudit Turaiyur.
12 ,, Koteeswara Sastrigal Avl., Do.
13 ,, Ramalinga Sastrigal ,, Appakudal-Bhavani.
14 Sriman Ramakrishna Battachariar ,. Sauskrit Pandit, Bhaskarapurnm.
15 ,, S. A. M. Seshadhri Achariar Avergal, Sanskrit Pandit, Chattusastra Vâda Kalpaka tharu Vidyasala, Kumbakonam.
16 M. R. Ry. Kothanda Ramanujachariar Avl., Head Master Z. L. S. scho[ol] Turaiy[ur]
17 ,, M. Rungasami Iyer Avl., Head Clerk Zemindar's Office ,,
18 ,, L. Sundarayya Garu B. A., Egmore.
19 ,, M. S. Pathmanabha Iyer Avl., 2nd Grade Pleader, Turaiyur.
20 ,, K. Sankaralinga Mudaliar, Avl.. Proprietor. Dodson Press, Trichy.
21 ,, T. S. Naga Ratnam Iyer Avl., Clerk Postal Supt's Office, Trichinopoly.
22 ,, T. V. Venkata Rama Iyer Avl., Clerk, Purnachandrodaya Press Tanjore,
23 ,, G. Krishnier Avl., Supervisor of schools, Dharmapuri Taluq,
24 ,, P. K. Arthurari Iyer Avl., Erode.
25 ,, G. Krishnier Avl., Goppichettipolayam.
26 ,, Srikanta Iyer Avl., ,,
27 ,, G. S. Thondi Raja Iyer Avl., Goppichettipolayam.
28 ,, V. Padmanabha Sastrigal ,, ,,
29 ,, Ramanuja Iyengar Avl., 2nd grade Pleader Srirangam.
30 ,, Sathasivam Pillai Avl., Supervisor of Schools Cuddalore.
31 ,, Rama Iyer Avl., do Srirangam.
32 ,, Venkatarama Iyer Avl., Bangalore-Cantonment.

விசபுகழ்சேர் திருவாவடுதுறையம்பலவாணவிமலர்காண

நேசமொடு சென்று கண்டேனெண்முகத்துயர்தலையுகிலாவிங்ஙேனி

பாசணமுந்தாமதிவனதுமலைவில்லாரும் வலியுப்பாச

மோசனஞ்சண்ணுதவுபாலிடனைக வருகையுமே முன்பு தோன்ற.

உ

சுகுண சுந்தரம்.

(மாதந்தோறும் பிரசுரிக்கப்படுந் தமிழ்ப்பத்திரிகை.)

வாலம் 1. 1902௵ ஜூன்௴. கி. 2.

RATES OF SUBSCRIPTION.

…ly including Postage	Rs.	3—0—0
yearly „ „	„	1-12—0
terly „ „	„	0-14—0
le copy „ „	„	0—5—0
: numbers „	„	0—6—0

…ign Subscription 6. S. Per Annum.

Subscriptions begin with 1st May …ch year.

A discount of 8 as. and 4 as. res…ively will be allowed to regular …ual and half yearly Subscribers, … a grace of two months to the …ner and one month to the latter …scribers will be granted for the payment of Subscriptions, to entitle …m to the discount aforesaid. A copy …l be supplied *gratis* to those who …lect not less than 10 Subscribers at …ime.

A copy will be sent free to those … contribute articles to the Journal.

The Editor will not undertake to …blish any matter other than he …ems worth publishing. Contributors …e requested to write their names and …dress legibly.

☞ The Managing Proprietor reserves … himself the right of republishing …l matters that appear in this journal. …ll correspondents are requested to …nclose, postage stamps to ensure a …eply by quoting the register number.

Managing Proprietor,
SUGUNA SUNDRAM OFFICE,
Turaiyur,
Musiri Taluk,
TRICHY DT.

சந்தாவிவரம்.

௵ 1க்கு தபால்கூலிஉள்பட	ரூ.	3—0—0
ஆறுமாதத்திற்கு „	„	1-12—0
மூன்றுமாதத்திற்கு „	„	0-14—0
பிரதி ஒன்றுக்கு „	„	0—5—0
பழய பிரதி „	„	0—6—0

இப்பத்திரிகைக்கு மே௴ முதல் சந்தாக்கணக்கு வைக்கப்படும். மே மாதத்துக்குள் சந்தாத்துகையை முன் பணமாய்ச் செலுத்துபவர்களுக்கு வருஷச் சந்தாவில் அணா 8ம், ஆறுமாதச்சந்தாவில் அணா 4ம், தள்ளிக்கொடுக்கப்படும்; வருஷந்தோறும் கிரமமாய் சந்தா செலுத்துபவர்களுக்கு இரண்டுமாதத் தவணையும், ஆறுமாதத்திற்கு ஒருதடவை செலுத்துபவர்களுக்கு ஒரு மாதத்தவணையுங் கொடுக்கப்படும். பத்து கையொப்பக்காரர்களை ஒரேதடவையில் சேர்த்தனுப்புவோர்களுக்கு, மாதந்தோறும் ஒரு புத்தகமனுப்பிவரப்படும். விஷயங்களெழுதிக் கொடுக்கும் பண்டிதர்களுக்கு இனாமாக ஒரு புத்தகம் அனுப்பிவரப்படும்.

அறிவிப்பு:—இந்த பத்திரிகைக்குப்பண்டிதர்கள் எழுதிக்கொடுக்கும் விஷயங்கள் தகுந்தயோக்யதை யுடையவைகளாயிருந்தாலன்றி பிரசுரிக்கப்படமாட்டா; விஷயமெழுதிக்கொடுப்பவர் அதில் தங்கள் கையொப்பமும், விலாஸமுந்தெளிவாயெழுதியனுப்பவேண்டும்.

☞ புத்தகரூபமாய் வெளிப்படுவதற்குரிய விஷயங்களை, எழுதியனுப்பினோர் அனுமதியை எதிர்ப்பாராமலே அச்சிடுவதற்கு எமக்கு சுதந்திரமுண்டு.

மானேஜிங் புரோப்ரைட்டர்,
சுகுண சுந்தரம் ஆபீசு, துறையூர்.

திருமால் துதி.

வாளைமணந்த செழுங்கமல வயலுந்தூநீர் வாவிகளும்
வளர்பூந் தருவார் படப்பையுநீஇ வானமளக்கு நெடுங்கமுகின்
பாளைமணமும் பரந்தெழில்செய் பண்பார் துறைசையம்பதிவாழ்
பணைப்பூங்குழலி னிசைக்குருகிப் பரிவானெய்துந் தொறுவியர்தந்
தோளைமணந்த துணர்த்தபசுந் துளவத்திருமாறனைத் துதிப்பாந்
தூநீர்வையை சூழ்கிடந்த துதிசேர்மதுரைத் தொன்னகரின்
வேளைமணப்பத் தீயரும்பும் விழியான் கேட்டுச்சிரந்துளக்க
மிளிருங்கல்லா டன்றமிழாய் மேவுங் கொடியைப்புரந்திடவே.

தீர்த்தபுரி.

அவ்வண்ணமாய் நிருபத்தைப்பெற்றுக்கொண்டு சென்ற தூது அதிவேகமாயிரவும்பகலு நடந்து சென்று மூன்று நாள் திருவண்ணா யில் தென்மேற்கு மாடவீதியிலுள்ள சிவப்பிரகாச சுவாமிகள் திரும தையடைந்து, அத்திருமடத்தில் வீற்றிருந்த துறையூர் ஜமீன் இளவரசன கண்டு தரிசித்து, சாஷ்டாங்கமாய் வந்தனஞ்செய்து எழுந்து கைகட்டிக் ண்டு நிற்றலும், அவ்விளவரசர் "நீ யாவன்? எங்ஙனம வந்தனை?" என ரச்னம் பண்ணலும், தூதுவன், "அடியேன் தங்களுழியனதான், துறை அரண்மனையினின்றுஞ் சமுகத்திற்கு நிருபங்கொணர்ந்துவந்தனன்," என ன். அம்மொழியைக்கேட்ட அமைச்சர் பிரான், அந்நிருபத்தைத் தம திருக்கரத்திலேற்று, மிக்க சந்தோஷமுடையராய், தமது தமயனாரா ஜமீந்தார் அவர்களுடையவும், இரண்டாவது மந்திரிமார் முதலிய உத்திய கஸ்தர்களுடையவும், இஷ்டமித்திர பந்துக்களுடையவும், வித்துவான்க டையவும், பௌரோகிதர்களுடையவுமற்று மந்தணர் முதலிய நகரவா களுடையவும், க்ஷேமமுதலிய வர்த்தமானங்களை தீர்க்கமாய் விசாரித்த பின், அவனை ஸ்நாந போஜனாதிகளைச்செய்து விச்ராந்தியடைந்திருக்கும்ப ஆக்ஞாபித்துவிட்டு, உள்ளேசென்று தமது பரிசாரகர்களை விளித்துத் தூ துவனை அன்ன பானாதிகளாலுபசரிக்கும்படி கட்டளையிட்டு, தாம் ஏகாந் மாயிருந்துகொண்டு கடிதத்தைப்பிரித்து வாசித்துப்பார்த்து சங்கதிகளைய ணர்ந்துகொண்டதின்பின், தமது தத்வஞானபோதகாசாரியராகிய சிவப்பி ரகாசசுவாமிகள் சன்னிதானத்தையடைந்து, வணங்கித்துதித்து நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ்செய்து நிருபத்தையும் சுவாமிகளிடந்தந்து, "அ டியேன் நடந்துகொள்ளவேண்டியவைகட்கு சன்னிதானத்தின்யுக்தானுசார ங்கட்டளையிட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கேட்டுக்கொண்டார்.

பின்னர், சுவாமிகள் நிருபத்தைக் கண்ணுற்று வர்த்தமானங்களைச் செவ்விதாயுணர்ந்ததின்பின், பரியாலோசித்துத் தமது சீடராகிய லிங்கதுரையவர்களை யன்போடு கிருபாவீக்ஷண்யஞ்செய்து சொல்லுவாராயினர். "ஓய் மெய்யன்பரே! நுமது தமயனருக்கு அந்தியகாலஞ்சமீபித்திருப்பதாலும், அவருடைய அரசாட்சிக்கு வுய்மையன்றி பிறசந்ததிகளின்மையாலும், அவ்வரசாட்சியைப்பரிபாலனஞ் செய்வதற்கு நீர் செல்லவேண்டியதவசியமே! நீர் விற்பத்தியிலும், ஞானசாஸ்திரவிசாரணையிலும், அதி தீக்ஷண்யமான புத்தியுடையவராயிருப்பதால்,

"செவிக்குணமில்லாதபோழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப்படும்,"

எனப்பெரியார் அருளியவாறு யெப்பொழுதும் சாஸ்திரக்கேள்வியிலேயே மனதைச்செலுத்தி தத்துவவிசாரணையென்னுமானந்த சமுத்திரத்தின் மூழ்கியிருந்த நுமக்கு அரசாட்சியிநீதி விசாரணைசெய்தன்முதலிய காரியங்களால் தொந்தரையுண்டாமென்றும், அதனல் சாஸ்திரங்களை புனர்விசாரணை பண்ணுதற்கு காலங்களேற்படாவென்றுங் கருதி, அதனை வெறுப்பினுல் தள்ளக்கூடுமாயினுமத்தகைய விரக்தி நான்காவதாசிரமமுடையவர்கட்கே தக்கதன்றி நும்மைப்போன்ற யிரண்டாவதாசிரமமாகிய யில்வாழ்க்கையினையுடையவர்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலுனென்றாங்
கைம்பொலத்தா றோம்பறலை,"

என்றபடி ஐந்துவகையினர்க்குமுரிய கடன்களைச்செய்யவேண்டுமென்றுஸ்மிருதியில் விதித்திருத்தலால், இடம்பொருளேவல்களைக்கொண்டேயக்கடன்களை நிறைவேற்றுதற்கு நீர்கடமைப்பட்டிருக்கின்றீர்; அன்றியும், ஸ்ரீராமமூர்த்தியும் ஜனகராஜனும் இராஜ்யபாரத்தை வகித்துக்கொண்டே தத்துவவிசாரணையில் சுவானுபவத்தை யடைந்திருந்ததாகப்புராணங்களிற் கேட்டிருக்கின்றீரன்றோ! ஆதலால்,

"எத்தொழிலைச்செய்தாலுமே வத்தைப்பட்டாலு
முத்தர்மனமிருக்குமோனத்தே—வித்த நித்தங்
காதிவிளையாடி யிருகைவீசிவந்தாலுந்
தாதிமனநீர்க்குடத்தேதான்."

என்றும்,

"மனத்தகத்தழுக்கறுத மௌனயோக ஞானிகள்
வனத்தகத்திருப்பினு மநத்தகத்தழுக்கறார்
மனத்தகத்தழுக்கறுத்த மௌனயோக ஞானிகள்
முலைத்தடத்திருப்பினும் பிறப்பறுத்திருப்பரே:"

எனமேலோர் கூறியிருப்பதை நீரேயறிந்துளீராதலானும்,

"தருவதீமையி நன்மையு மூழடுத்ததை யுயர்க்கழைமேனின்
றுரைகளாதி செய்கூத்தரிற்பிறனை நச்சொருமகடவனேவல்
புரிதறன்னினைம் பொறிகளாற்பற்றினும் புகனிராசையை நீபுற்
றிரவினும் பகலினும் விடேனெஞ்சமே யின்பவீடெளிதாமே."

ஒருவன்றனக்குத்தீங்கு வராவண்ண நாடோறும் ஜாக்கிரதையாய்த் தன்னைப்பாதுகாத்து வருவானாயினும் அவனுடைய ஊழானது, அவன்செய்த பாபகர்மத்துக்கீடான பலவகைப்பட்ட துன்பங்களை யூட்டுவிப்பதைப்போலவே, அவன்செய்த புண்ணியங்கட்கீடான சுகங்களை அவன்முயற்சிசெய்யாவிடினுமவ்வூழ் ஊட்டுவிக்குமென்பது நிச்சயம்: இவ்விதிக்கு நீரே சாட்சியாகவிருக்கின்றீர்; உம்முடைய தியஊழினால், சகோதர விரோதமும் இராஜ்யத்தை யிழத்தலும் தேசசஞ்சாரமுதலிய துன்பங்களுண்டாயின; இப்பொழுது மீண்டுமுமக்கு நல்லூழ்வந்தமையால் இராஜ்யப் பேறுகிடைக்கப்போகின்றது; துக்கத்தையாவது சுகத்தையாவது முயற்சியால் நீர் இச்சியாவிடினும் அவைகள்தாமே ஊழ்காரணமாகப் பற்றுகின்றமையால். அன்றியும், கழைக்கூத்தாடுவோன் மூங்கிலின்மேலேறி நின்று விநோத நடனங்களும், நானுவிதவார்த்தைகள் பேசுதலும் செய்வானாயினும், அவனுடையநோக்கம் தன்னுடலைப்பாதுகாப்பதில் வைத்திருக்குமாறுபோலவும், அயலானை விரும்பியிருக்கின்ற ஒருஸ்திரியானவள் தன்னுடைய நாயகனிடத்துக்காரியங்கள் செய்துகொண்டிருப்பினும் அவளுடையமனமவ்வயலானையேநாடியிருக்குமாறு போலவும், ஞாநிக்கு பிராப்த கர்மவசத்தால் அவனிடத்துப்பற்பல செய்கையுண்டாமாயினும் அவனதுயெண்ணம் பிரமானுபவத்திலேயே தங்கியிருக்குமன்றோ.

இல்லறத்திலிருந்து பிரமானுபவம் பண்ணுபவன் நடந்துறங்குவோனுக்கு நிகரென்றும், துறவறத்திலிருந்து பிரமானுபவம் பண்ணுபவன் புஷ்பசயனத்திற்கிடந்துறங்குவோனுக்கு நிகரென்றும் ஞானநூல்களில் கூறப்பட்டிருந்தாலும், அவ்விருவித அறங்களும் ஒருவனுக்கு பரிபாகத்தளவில் தாமே வருவனவன்றி அவைகளையவன் வலிந்து பெறுதற்கு சுவாதீனப்படுவனவன்று. அவைகளை முயற்சியால் பெறப்புகின், இல்லறத்தை விரும்புவோனுக்குப் பரிபாகத்தால் துறவறமெய்தாவிடினும், இயமனால் தாரபுத்திராதிகளுடைய துறவையெய்துகின்றான். துறவறத்தை விரும்புவோன், பரிபாகத்தால் துறவெய்தாமையால், தம்மனைவியாதியர் பிறரை யாசிரயித்திருக்கும் வண்ணமிழந்து, அயலான் மனைவியாதியரை ஸ்வீகரித்துக்கொண்டு குடும்பவிர்த்திபண்ணுகின்றவனாகின்றான். ஆதலாவில்லறந்துறவற மிரண்டும் பரிபாகமுள்ள ஞானிக்கு உசிதந்தான். இதுபற்றியே,

"நலமுறுமோர்சிவ ஞானியில் வில்வாழ்
நிலையறமாயினு நீத்துநிற்குமோர்
தலையறமாயினுந் தரித்துஞாலமே
விலையறைகாயென யிருக்குமென்பவே."

என்று நமது சீடருளொருவர் கூறியிருக்கின்றார். அன்றியும், நமது மற்றொரு சீ_ராகிய சாந்தலிங்கரென்பவர் தம்மாற்செய்யப்பட்ட ஞான நூல்களிற்றுறவறத்தையே ஞானி அவசியம் அடைதற்குரியோன் எல்பதை வற்புறுத்திக்கூறியிருந்தும், அவர் இல்வாழ்க்கையிலேயே நிலைபெற்றிருக்கின்றனர். இதுகாறும் யாம்பிரவசனித்தவைகளைத் தனிமையிலாலோசித்துணருவீராயின், இந்திர பட்டத்திலிருந்தாலுங்கூட ஸ்வானுபவத்தை யடைவதற்குத் தடையின்று. ஞானியானவன் பிரபஞ்சத்தை நானாவிதப்பொருள்களாகக்கண்டு மயங்காமல் மாயையின் காரியமென்றறிந் திருப்போனாகலின் அரசியன்முதலிய வெவ்வளவு பெரிய வியவகாரங்களிருப்பினும், அவற்றிற்கிடந்துமயங்குதல் செய்யான்.

"பழுதையைப்பாம்பென்ற பயம்போனாற்பாவித்
தழுதுடம்பை யாட்டுகினுமாமோ—தொழிலொழிவி
னின்றசிவயோகி நினைந்தொறுகானீவாரா
யென்றழைத்தாலும் பழையாதென்."

ஒருவனிருட்காலத்தில் பழுதையைக்கணடவிடத்து அதனைப்பாம்பென்னும் பிராந்தியினால் பயகம்பனாதிகளையடைந்து விரைந்தோடுகின்றான். அத்தகையோன் பகற்காலத்தில் அப்பழுதையைப்பழுதை யென்றுண்மையையுணர்ந்ததின்பின், தானிரவிற்கண்ட பாம்பாகப்பாவித்து பயகம்பனாதிகளைச் செய்யப்புகின், அவைகளவனுக்கியல்பாயுண்டாவது போலுண்டாகுதலில்லை. அதுபோல, ஞானியாவான் அஞ்ஞானதசையில், தநுகரணபுவநபோகங்களாகிற அகங்காரமமகாரத்தில் கட்டுண்டிருப்பினும், ஞானதசையில் அவைகளை வினைச்கீடாய் மாயையினின்றுண்டானவைகளென்று அறிந்திருப்போனாகலின், அவனை மாயாகாரியங்கள் மயக்குவதற்கு அசக்தமாய் விடுகின்றன.

பொய்ப்புலன்களைந்துநோய் புல்லியர்பாலன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாஞ்—துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச்சூழுவளிபோய்ச்
சுழற்றுஞ்சிறுபுன் றுரும்பு.

என்பதுமதுபற்றியே கூறப்பட்டுளது.

இத்தகைய சுவானுபவமுமக்கிருத்தலானும், அன்றியுமுமதுசமஸ்தானத்தில் வித்துவான்களும் ஞானசாஸ்திரிகளுமிக்கிருப்பதாலும், அன்னோர்

பால் சல்லாபமாக ஞாநானுபவத்தைத் தெளிந்தனுபவித்தும், புத்திமான்களாகிய மந்திரிப்பிரதானி முதலியோர்களால் அரசியலை நடத்தியும் வரக்கடவீராக," வென்றார்.

இவ்வாறு தமது ஞானாசாரியார் அன்பினால் உரைத்தருளிய வுபதேசமொழிகளைத் தமது செவிகுளிரக்கேட்ட வமைச்சர் பெருமான், மீட்டுமாசிரியரை வணங்கி, அவர் திருமுகத்தைப்பார்த்துச்சொல்வாராயினர். "சுவாமி! தேவரீரது கட்டளையின்படி துறையூரில் ராஜாங்கத்தை வகித்துக் கொண்டிருப்பேனாயின், தேவரீர் திருவாய் மலர்ந்தருளும் ஞானார்த்தங்களையடிக்கடி கேட்பதற்கும், தேவரீரது திருமேனியைத்தரிசிப்பதற்கும் அபாத்திரனாய் விடுவேனாகலின், சுவாமிகளென் மீது கருணைகூர்ந்து, துறைசையில் அடியேனாலமைக்கப்படும் திருமடத்தில் எழுந்தருளியிருந்து, சன்மார்க்கங்களைப்போதித்து,அடியேனை கிருதார்த்தனாகுமாறு திருவருள்சுரந்து அனுமதிகொடுத்தாலன்றி, சன்னிதானத்தை விட்டுநீங்கி உயிர்தரித்திரேன்," எனலும், அவ்வன்பர் வேண்டுகோளுக்கு மெய்யன்பிற்கு மனதிரங்கி, "அவ்வண்ணமாகுக! நீர் துறைசைக்குச்சென்று அரசாட்சியைப்பெற்றுக்கொண்டு திருமடயமைத்ததின்பின் தெரிவிக்கப்படுமாயின் அங்கனம் வருகின்றோம்;" என்றாசி கூறிவிடையளித்தருளினர்.

ஆசிரியர் கட்டளையை மறுப்பதற்கஞ்சி விடைபெற்றுக்கொண்டலிங்கதுரையவர்கள், மருநாளுதயத்தில், ஆசிரியர் கொடுக்கப்பெற்ற பல்லக்கிலாரோகணித்து, சிலபரிஜனங்களும், துறையூர்சமஸ்தானத்திலிருந்து வந்த ஒற்றனும்தம்மைப்புடை சூழ்ந்துவர, துறைசையை நோக்கி சங்கைக்காவடியையுமெடுப்பித்துக்கொண்டு புறப்பட்டு வருகின்றார்.

அவ்வாறு வருகின்ற விளவரசர் மத்தியானத்தில் தீர்த்தக்கரையுள்ளவிடத்திற்றங்கி பூஜைபோஜனமாதிகளை முடித்துக்கொண்டு சற்றிளைப்பாறி மீண்டும் சூரியாஸ்தமனவளவில் விரைந்துசென்று ஓரூரிற்றங்கினர்கள்; அப்பொழுது மாலைக்கடன்களை முடித்துக்கொண்டு சிரமபரிகாரஞ் செய்து கொண்டிருக்கையில் துறையூரில் தம்மாலியற்றிய திருக்குளத்தைப்பற்றிய விஷயங்களையறியவேண்டுமென்னும் ஞாபகமவருக்குத்தோன்றலும், ஒற்றனையருகிலழைத்து, "தூத! துறையூரில் எம்மாலியற்றிய திருக்குளம் எத்தன்மையாகவிருக்கின்றது? அதனியல்பை யெமக்குச்சொல்வாயாக வெனலும், தூதுவன், "சுவாமி! இப்போது அத்திருக்குளத்தின் நிலைமையைக்காண்புழி,எம்போல்வார்க்கே வருத்தமுண்டாமாயின் தங்களுக்கதைப்பற்றிச்சொல்வதனாலுண்டாகும் சோகத்தைக்குறித்து எனக்கு நாவெழுதலின்றாயினும், தாங்கள்பேரவாவுடன் கேட்கவிரும்பினமையால், சொல்லுகின்றேன் கேண்மின். தாம் நகரத்தை விட்டுப்புறப்பட்டதின்பின், பெரிய ஜமீந்தார்

தங்கள் மீதுள்ளகோபம் தங்களை சிரச்சேதம்பண்ண வுத்தரவளித்தும் தீராமல் திருக்குளத்தையுஞ்சிதைத்துத் தூர்த்துவிடும்படி பிரதானிசட்குத்தரவளித்தனர். அரசனது கொடியமொழிகளைக்கேட்ட பிரதானிகள், அரசனுத்தரவின்படி நடவாவிடில் நமக்கிம்மையிலேயே தண்டனைநேரிடும்; திருக்குளத்தையழித்தாலோ மறுமையில் நிரையத்துன்பமுறுவோம்; ஆதலாலிதற்கென்செய்வதென்று "இருதலைக் கொள்ளியின்னுள்ளெறும் பொத்து," இடர்ப்பட்டனர்; பின்னர், அப்பிரதானிகள் ஒருவாறு மநந்தேறி, அக்குளத்தை முற்றுமழிப்பதனாலெய்தும் பாபத்தையும், அழியாமையால் அரசனுக்குண்டாகுங் கோபத்தையும் பரிகரிப்ப வோருபாயத்தையாலோசித்து அரசன்பாற்சென்று, சுவாமி! தங்களுத்திரவின்படி, திருக்குளத்தையிடிப்பதற்கு மிகுந்த திரவியம் வேண்டியிருக்கின்றது, நமதுபொக்கிஷத்திலிருந்த திரவியங்கள் யாவுமெடுத்து முதன்மந்திரியார் கைசலியாமல் குளத்தைக்கட்டிவிட்டமையால் அதனை யிடிக்கசத்தகுந்த பணம் கஜானாவிலில்லை; ஆதலாலக்குளத்தைக்கட்டிய தங்கள் சகோதரரது வெண்ணம்பலியாமற்போகச்செய்வதே நமக்கு முக்கியமாயிருப்பதால், ஏரியினின்றுங் குளத்துக்குவிடப்படுகிற நீர்வரத்தையடைத்தும், அக்குளத்தை எச்சிற்கலை குப்பை முதலிய அசுத்தங்களைப்போடுவித்தும், நான்குபடித்துறைகளிலும் கருங்கல்லினால் விசித்திர வேலைப்பாடுள்ளனவாய் வைக்கப்பட்டிருக்கிற அழகிய அஷ்டசிம்ஹலலாடங்களை உடைத்தெறிந்தும் குளத்தைப்பாழ்பண்ணிவிட்டால், அமங்கலஸ்திரீயைப்போல் ஒருவருக்கும் பயன்படாமற்போவதுமன்றி, பணச்சிலவுமதிகமில்லை என, ஆயினிங்கனமே செய்மின், என்றரசன் விளம்பக்கேட்ட பிரதானிகள், தாங்கள்மேலே கூறியவண்ணஞ்செய்யப்பட்டு

"கண்ணில்யாக்கையுந் திங்களில் கங்குலுங்கரு து
மண்ணன் மந்திரி யில்லரசாட்சியுமருளிற்
றிண்ணனெஞ்சமும் புலவரில்லவையுமொண்டீம்பால்
வண்ணவாயிள மக்களில்வாழ்வு மொப்பாமால்,"

என்னுமாறு போலவே யத்திருக்குளமுமழகிழந்திருக்கின்றது;" என்றான்.

இன்னும் வரும்.

பக்ஷபாதமும் பிராத்ருதுரோகமும்

அல்லது

பிறமாதர் நட்பினுலுண்டாகுநிந்தை.

விநாயகர் துதி.

பிரணவவெழுத்தென பிறங்குமானனங்
கிரணவெண் மருப்பினற் கிளரப்பாந்தளா
பரணமாப்புனைந்ததோளிர் பகவனுபுரச்
சரணவாரிசமலர்தலையிற்சூடுவாம்.

கலைமகள் துதி.

மழைபூத்தமலர்க்குழலு மதிபூத்த திருமுகமும் வயங்குமுத்தின்
குழைபூத்த துணைசெவியுங்குடம்பூத்தகுவி முலையுங்குவளைக்கண் ணுங்
கழைபூத்தமென்றோளுங் கவின்பூத்த தொடிக்கரமுங்காமர் நுண் ணு
லிழைபூத்தமருங்குலும் வெண்மேனியுந் தாமரையடியுமேத்தல் செய்வாம்.

I

காரைக்காலுக்கடுத்த மூன்றுநாழிகைவழிதூரத்தில், திருநள்ளாறு என்று பெயர்பெற்ற ஒருதிவ்விய சிவக்ஷேத்திரமுண்டு. அது நளமகாராஜனுடைய கலியை த்தீர்த்து, அவனுக்குச்சனிபகவான் பிரத்தியக்ஷமாகி யனுக்கிரஹித்து, அவனைப்ப ழய படி தமயந்தியுடன் தன்னகரஞ் சேர்ப்பிவித்த மகாசன்னிதானம். அதில் ஓர் பெரிய மாடிவீட்டுத்திண்ணையில் துலாமாஸத்தில் காலமே ஓர் விருத்தர், வ ருஷந்தோறும் வாசித்துவருகிற வழக்கப்படி, துலாபுராணம் வாசித்து அர்த்தஞ் சொல்லிக்கொண்டிருந்தார். அவருக்கு வயது 80-85 யிருக்கலாம், அவர்திருடகா யராலுமப்பொழுது தான் கொஞ்சங்கொள்ளுகொள்ளென்று இருமலினுல் அவ ஸ்தைப்படுவதாகக்காணப்பட்டது.

அப்புராண பிரஸங்கத்திற்காக, வருஷந்தோறும், மகாஜனங்களாலும், இதரர் களாலும், தங்களாலியன்ற சம்பாவனையும், கலியாணகட்டங்களில் வஸ்திரமுதலிய மரியாதைகளும் செய்வது வழக்கம். அவ்வண்ணநடந்துவருநாட்களிலோர்நாள் சுபத் திரையின் மனோபீஷ்டப்படி பகவானன கிருஷ்ணன், யாருமறியாமல் அர்ச்சுனச் சன்னியாசிக்குத்தன் தங்கையான சுபத்திரையை விதிபூர்வமாய் பாணிக்கிரகணஞ் செய்வித்து, தான்பலராமர் முதலிய மற்றயாதவர்களிருக்குமிடம் சேர்ந்ததாய் முதல் நாள்கதை முடிந்ததின்பிறகு, சுபத்திராதேவியானவள் இரதசாரத்தியஞ்செய்ய, பாண்டுகுமாரச் சிங்கமாகிய பார்த்தன் இரதமேறி தன்னகரமான இந்திரபிரஸ்த நோக்கிச் சென்றவரையிலுள்ள கதையை வாசித்துமுடித்தார் விருத்தரான பெரி யவர்.

புராணமுடிந்ததும் சிலஸ்திரீபுருஷர்கள் விருத்தரிடமக்ஷதை வாங்கித்தலையி ல்போட்டுக்கொண்டார்கள். அப்பொழுது புராணீகர், அவர்களில் மானிறமான அழகிய ஒருபெண்ணைப்பார்த்து, "லக்ஷிமி! இங்கிருக்கிற இரண்டுமுறத்திலுள்ள சுவ

யம்பர்கங்களை உன்வீட்டுக்குக்கொண்டுபோ, தேங்காய் மூடியிலொன்றும், பழங்களில் நான்கும், நீ எடுத்துக்கொண்டுபோ, சுந்தரத்தை வரச்சொல்லு சீக்கிரம் நான் வீட்டுக்குப்போகவேணும்'' என்றார்.

அங்கே கட்டைகுட்டையாய் சிறுசிகப்பு(மானிறமெனலாம்) அதிகஸ்தூலமில்லாத ஒருவன் பெரியவரைப்பார்த்து, "அண்ணா! இன்று புராணமதிக இரஸமாயிருந்தது. உங்களுக்குச்சக்தியில்லாவிட்டாலு முன்மாதிரி இராகம் போட்டு இராமாயணார்த்தம் சொல்லுவதுபோல இப்பொழுது சொல்லாவிட்டாலும் சுகமாகவே கேட்கக்கேட்க ஆசைமிகும்படி நன்றாய்க் கதையைச்சொல்லுகிறீர்கள், சுபத்திரா கலியாணம் நேற்றுதானாச்சுதோ?'' என,

விருத்தர்: ஆம்! நேற்றுதானச்சு கலியாணம்,'' என்றும், பின்னுமவனைப்பார்த்து, "அடே இரங்கசாமி! என்னாலென்னயிருக்கிறது, இந்தகத்துக் கண்ணு நன்றாய் வாசிக்கிறான், அர்த்தஞ்சொல்லும்பொழுது ஒவ்வொருபதங்களையும் எடுத்தெடுத்துக்கொடுக்கிறான், நல்லபுத்திசாலி'' என்றார்.

இரங்கசாமி: "அண்ணா! சீமா (ஸ்ரீநிவாஸன் என்பது சரியானபெயர். அவனை சீமாவென்றும் கண்ணுவென்றுஞ் செல்லப்பெயரிட்டழைப்பது வழக்கம்) நல்ல ஞானஸ்தன், சித்தப்பாவிடம் காவியப்பயிற்சிசெய்கின்றான்; அல்லாமலும் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப்போகத் தமிழுக்குப் பதிலாய் சமஸ்கிருதம் வாசித்திருக்கின்றானல்லவா?''

ஸ்ரீநிவாசன்: "எல்லாம் பெரியோர்களின் அனுக்கிரகம், என்னாலென்னவாகும்,'' (இரங்கசாமியை நோக்கி) "நீ எப்போவந்தாய்? அப்பா!''

இரங்க: "நான் நேற்று சாயரக்ஷை வந்தேன்.''

ஸ்ரீநி: "நீ மாத்திரந்தான் வந்திருக்கிறாயா?''

இரங்க: "என்னகமுடையாளும் வந்திருக்கின்றாள்.''

ஸ்ரீநி: "மன்னார்குடியில்தானேயிருக்கிறாய்? அதைவிட்டெப்போது புறப்பட்டாய்?? திருமலைராயன்பட்டணத்தை விட்டுப்போனதுமுதல் அங்கே என்னப்பா செய்துகொண்டிருக்கிறாய்?''

இரங்க: "மன்னார்குடியில்தானிருக்கிறேன், அதைவிட்டு நேற்று காலை 6-7 மணிக்குப் புறப்பட்டு நீடாமங்கலம் வந்து சுமார் 10-11 மணியிருக்கும், ரயிலேறினோம், சாயரக்ஷை 5 மணிக்கு இங்கு வந்து சேர்ந்தோம். கச்சேரியில் எழுத்துவேலை செய்துவருவதால் ஜீவனம்நடந்துவருகிறது.''

விருத்தர்: "சீமா! நாழிகையாச்சுது நான் ஒன்றுகேட்கிறேன், மூத்தவன் இராமநாதனிருக்கானே, அவன் தானே புராணம் வாசித்து அர்த்தஞ்சொல்லட்டுமே, எனக்கோ சக்தியில்லை இருமறது, சுந்தரத்துக்கோ அர்த்தஞ் சொல்லத்தெரியவில்லையே, வாசிப்பன், இந்தப்புராண வரும்படியில் மூன்றுபங்கு எனக்கும் ஒருபங்கு சுந்தரத்துக்கும் கொடுக்க உத்தேசிக்கிறேன்.''

அப்பொழுது கறுத்துஸ்தூலித்த தொந்திவயிற்றோனான ஒருவன் சித்தானைக்குட்டி போல தலையை யசைத்தசைத்து சைகை பண்ணிக்கொண்டு, பெரியவர் வார்த்தையைக் கேட்டுக்கொண்டே வந்து, "இராமநாதனுக்கு அர்த்தஞ்சொல்லத் தெரியுமோ. நீங்களெழுதிக் கொடுத்திருக்கு மூன்று அத்தியாயமோ அல்லது இர

ண்டோ தானே பார்த்து வாசிப்பான். அதைப்பார்த்து நானும் வாசிக்கிறேன்" என்றான்.

இரங்க: (தனக்குள்) "இந்த சண்டை ஒழிகிறதில்லே, இராமநாதன்தான் அண்ணுவுக்குப்பிள்ளை. நாங்கள் பிள்ளைகளா?" என்று சீமாவை நோக்கி, "அப்பா! நீயே பார், இந்தக்கூத்தை."

ஸ்ரீநி: அண்ணுவிற்கல்லவா! உங்களைத்தானே, நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள்; இராமநாதனுக்கு அர்த்தஞ்சொல்லத்தெரியுமா? புஸ்தகத்தைப்பார்த்துத்தானே வாசிப்பான், அந்தமாதிரி இவன் வாசிக்கமாட்டானு?

விரு: "இராமநாதன் அர்த்தஞ்சொல்வான்."

ஸ்ரீனி: "நான் நம்பவில்லேயே, அப்படியே அவன் சொன்னுலும் எடுபடாது, நீங்கள் தான் சொல்லவேண்டும்."

விரு: "நான்சொல்வதைப்பற்றி யொன்றுமாக்ஷேபணையில்லே, எனக்கு சக்திமட்டாகவிருக்கிறது. இருமறது; என்று (இருமினர்).

ஸ்ரீநி: நீங்கள் வேணுமானல் சுவஸதமாயிருங்கள், உங்கள்கடாசி பிள்ளை ஈசுவரனெங்கேபோனுன், அவன் பாடசாலேயில் வாசித்து அர்த்தஞ்சொன்னவனுயிற்றே அவனை வாசிக்கச்செய்யலாமே."

விரு: இராமநாதன் எப்படி பழகுகிறது? என்ன! அவன் அர்த்தஞ்சொன்னுலென்ன? நானிரண்டுவருஷமாயவனுக்காக உழைத்திருக்கிறேன்."

இரங்க: ஏன்! சுந்தரத்துக்குபழக்கினலாகாதோ, உங்களுக்கெல்லாப்பிள்ளைகளுஞ் சரிதானே இராமநாதன் மாத்திரமென்ன?"

ஸ்ரீநி: (இரங்கசாமியைப்பார்த்து) என்னப்பா நீங்கள் பேசுவதே விளங்கவில்லேயே! இராமநாதனுக்கு வித்பத்தியாயிருந்தாலெனக்குத்தெரியாதா? அவன் எவ்விதமாய்ப்புராணர்த்தஞ்சொல்லமுடியும்? சுந்தரமாவது தெளிவாய் வாசிப்பான்."

சுந்த: "சீனு! நான் சொல்வதைக்கேள், எங்கண்ணு, இராமநாதனுக்கு, சிலகடுதாசிகள் சேர்த்துத்தைத்த ஒருபுஸதகத்தில் துலாபுராணத்தை பதார்த்தமும் மொத்தார்த்தமும் எழுதிக்கொடுத்திருக்கிருர். அதைப்பார்த்துத்தான் அவன் அர்த்தஞ்சொல்லுவதாய்ச்சொல்லுகிருர், அந்தப்படி நான் சொல்லமாட்டேனே, எப்படியாவதிந்த புராணவரும்படியை எனக்கில்லாமல் பெரியபிள்ளைக்குச் சேர்க்கவேண்டுமென்றுதான்.

விரு: "அடே மந்திப்பயலே! நீ உழைக்கிறதில்லே, அவனுழைக்கிறன், மூணு அத்தியாயம் தாராளமாயர்த்தஞ்சொல்லுவன், மைத்ததை நானுமிருந்து சொல்லச்செய்கிறேன்."

இர: (ஸ்ரீனிவாசனிடந்தனியாய்) "தாராளமாயர்த்தஞ் சொல்லச்சொல்லுகிருராம், பெரியபிள்ளையை மூன்றத்தியாயம், இத்தனைவயதாகியும்பார் இவருக்கு—."

சுந்த: எனக்கு நீங்களந்தப்படி யர்த்தமெழுதிக்கொடுத்திருந்தால் நானுந்தான் அர்த்தஞ்சொல்லுவேன்."

ஸ்ரீநி: "அடா சுந்தரம்! என்னசண்டைபிடிக்கிருய் அவரை? புராணத்தை எழுதிப்பாடம்பண்ணித்தானுமுடியும் 'இரகுவம்சம்', 'மாகம்,' முதலியகாவியங்

கள் வாசித்தாலல்லவோ வித்பத்திஞானமுண்டாகும், நீங்களிருவரும் அர்த்தஞ்சொல்ல வேண்டாம்.''

விரு: ''ஞானம்வர எது வாசித்தாலென்ன? எப்படியாவது பதங்களடிபடவேண்டியதுதானே எ''.

ஸ்ரீநி: (தனக்குள்) இந்தச்சண்டையையொழிக்க நம்மாலில்லே. புராணத்தை தமிழர்த்தத்தோடு எழுதி வாசிக்கிறதாம். எங்குங்கேட்டது கூடவில்லேயே'. ''அண்ணு! இரண்டு நாளேக்குமுன் இராமநாதனர்த்தஞ்சொன்னதைக்கேட்டேன், அது இரஸிக்கவில்லே, எப்படியிருந்தாலும் காவியப்பயிற்சியடைந்தவர்கள் சொல்லும்விதம் வேறேதான், இவனுக்கு அர்த்தஞ்சொல்லவே தெரியவில்லே, ஸ்திரீகளுக்குக்கதை நன்ருய் விளங்கவில்லே, நீங்களூரிலில்லாமையினுல்புராணத்தை நிறுத்தக்கூடாதென்றிப்படி இராமநாதனேக்கொண்டாவது நடத்தச்சொல்லி யிருப்பீர்களென்றல்லவா நினைத்தேன்; சரிதான், நீங்களேதானு ஊரிலிருந்துகொண்டேயிந்தஏற்பாடு செய்தது! அவனுவது வாசிக்கவாவது அர்த்தஞ்சொல்லவாவது அரைவாயன் கால்வாயனெல்லாம், அவன் செம்மையாய் வித்பத்தியாகவிட்டுச் சொல்லலாம். நீங்கள் சொல்லுவதாயிருந்தால் சொல்லுங்கள், இல்லேயென்ருல் ஈசுவரன் சொல்லட்டும். அவன்கூட, பூர்ண வித்பன்னனுயிருந்தும், தர்க்கவியாகரண மெல்லாங்கற்றவனுயிருந்தும், செம்மையாய் இராமாயண மகாபாரதக்கதைகளே வாசித்தர்த்தஞ்சொல்லி ஜன இரஞ்சிப்புச்செய்யமாட்டுவானில்லேயே, எறக்குறைய பத்துவருஷமிருக்குமவன்வாசித்தது, என்ன வாசித்துத்தானென்ன, அனுபவமும் நல்லகேள்வியுமல்லவோவேண்டும், ஆயினும் அவனிப்புராணத்திற்கு அர்த்தஞ்சொல்லானு—; அல்லது நீங்களாவது பாராயணஞ்செய்துவிடுங்களிந்த வருஷம். மேலேக்குத்தகுந்த எற்பாடு செய்துகொள்ளுகிறேன். பெரியோர்கள் நாள் தர்மமிது, குறைவுகூடாது''.

இரங்க: (தனக்குள்) 'கண்ணு நன்ரு சொன்னுன் பேஷ்' என்று சிரக்கம்பம் பண்ணினுன். ''என் அண்ணு! சீமாசொல்லுகிறபடி ஈசுவரனே வரவழைக்கட்டுமா? நீங்களிருமலினுலவஸ்தைப்படவேண்டாம்''.

விரு: ''அவன் திருமலேராயன்பட்டணத்தில் பள்ளிக்கூடத்தையுங் காவியபாடம் சொல்லிவைப்பதையும்விட்டு, வரும்படியைக்கெடுத்துக்கொண்டு வரமாட்டான்''.

இரங்க: ''அண்ணு! அந்தப்பாடு உங்களுக்கென்ன? நானல்லவா அவனேத்தருவிக்கிறவன்''.

விரு: ''இராமநாதன் அர்த்தஞ்சொல்லாவிட்டால் போகட்டும், புராணபாராயணம்பண்ணிப்போடட்டும், அப்போ வரும்படி சுந்தரத்துக்குத்தரமாட்டேன்''.

இரங்க: (ஸ்ரீனிவாசனேப்பார்த்து) ''இப்படித்தான் பார்த்துக்கொள். இவ்வளவு வயதாகியும் கோணவழக்கு''.

சுந்தரம்: ''ஆமாம்! பெரியபிள்ளே பிழைத்தால்போருமவருக்கு, மைத்தபிள்ளேகள் எப்படிப் போனுலென்ன?''

இரங்க: "அம்மாளிடமிருக்கும் ஸ்ரீதனசொத்துக்களையும், இவரிடமிருக்கிற சொத்துக்களையும், பௌரோகித வரும்படியையும் இராமநாதனுக்கே கொடுத்துவிடப்பார்க்கிறார், இதுநியாயமா? மைத்தப்பிள்ளைகளோடிப்போகிறதா? அல்லது ஆற்றோடு போகிறதா?"

விரு: இவன் எப்போதும் கலகக்காரன் (இரங்கசாமியைப்பார்த்து), புராணபிரஸ்தாபத்திலே என்னென்னமோ கிண்டுகிறாயே?"

இரங்க: என்! உள்ளதைச்சொன்னால் நொள்ளைக்கண்ணிக்கு நோப்பாளந்தான்".

விரு: மன்னார்குடியிலிருந்து சண்டைக்குத்தான் நீ வருகிறாய்? நீயிங்கேவரும்போதெல்லாம் சண்டையில்லாமலிருக்கிறதில்லையே".

இந்தப்படி தகப்பன் பிள்ளைகளுக்கு விரைச்சலாயிருக்கையில, பிடிச்சபிடி தலைமயிரும், பாதிதலை சொட்டையும், கொஞ்சஞ் சிவப்பும், நெட்டையும், ஸ்தூலமில்லாச்சரீரமுடை யஒருவன்வந்து, "அண்ணா! மேலாத்துலே புண்ணியாவாசனமாமே பஞ்சுவந்து நாணு வாத்தியார் எங்கே என்றார், புராணம் வாசிக்கப்போனவர் வரவில்லை என்றேன், சீக்கிரமழைத்துவரச்சொன்னார். எந்திருங்கோ; நித்தநித்தந்தெரிந்த சண்டைதானேயிது, என்றான். விருத்தர், "இராமநாதா! நீ புராண அர்த்தஞ் சொல்லக்கூடாதாம்" என, அவன், ஸ்ரீநிவாஸன் எப்படிச்சொல்லுகிறானோ அப்படி கேட்போம். நான் சொல்லுவது இரஸிக்கவில்லையாக்கும். அதற்கிப்போதென்ன பின்னாலே பார்த்துக்கொள்ளலாமே, அவாத்துக்குப்போகவேண்டாமா? எந்திரிங்கோ," என, விருத்தர், "நீ முன்னால்போய் ஜாக்கிரதைசெய், நான் ஆம் (அகம் என்பது சரியானவார்த்தை இல்லம் என்று பொருள், போய் இதையெல்லாம்வைத்துப்போட்டு, சுந்தரத்தையுமழைத்துக்கொண்டு வருகிறேன்". எனவே, சுந்தரம், "நான் பேரளத்திலிருந்து காலமேதான் பத்து நாழிகைக்கு வந்தேன், காலெல்லாம் வலிக்கிறது, இன்று நான் வரமுடியாது". என்று சொல்லவே, விருத்தர், "வெறுந்தடியன், எருமைமாட்டுத்தடியனுக்கு புத்தியில்லை" என்றார். நீங்களென்ன வசவு வைதாலும் என்னால் முடியாதென்றான். பின்பு விருத்தர், ஸ்ரீனிவாஸனைப்பார்த்து, "நீ எப்படி சொல்லுகிறாயோ அந்தப்படி ஆக்ஷேபணையில்லை" என்றார். அப்பொழுது ஸ்ரீநிவாஸன், பெரியவரான வாத்தியாரைப்பார்த்து, "நான் இராமநாதனைக்கூடாதென்று சொல்லவரவில்லை; அந்தப்படி அபிப்பிராயப்படக்கூடாது, வித்பத்தியானதுமவனர்த்தஞ்சொல்லலாம்; இராமநாதனுக்குப்பாடஞ்சொல்லிக்கொடுக்கும்வேளையில் சுந்தரத்தையும் வரும்படிசெய்கிறேன்; இருவருக்கும் காவியபாடஞ் சொல்லிவையுங்கள்; வீணில் பதார்த்தமெழுதி சந்தைசொல்லி உருப்போடுவார்களா? வீண்காலப் போக்குபிரயோகங்களல்லவா எழுதிமொந்த உருவுபோடுவார்கள்; அவைகளையும் பதம்பிரித்து அபத்தமில்லாமல் சபைமெச்ச நிராக்ஷேபணையாய்ப்பண்ணிவைக்க வித்பத்திஞானமுண்டாகவேண்டியதவசியம்; பூர்வாபரகர்மங்களைச்செய்ய தந்திரங்களுக்காக யிடையிடையே அந்தந்த சந்தர்ப்பங்களிலே கலந்து உபயோகித்திருக்கும் "दत्वा" "गृहीत्वा" "आदाय" "अस्मत्" என்ற இந்த பதங்களுக்காவது அர்த்தந்தெரிந்து செம்மையாய் நடப்பிவிக்கப்பயிற்சிவேண்டாமா? இராமநாதன், சுந்தரனிவர்கள் இத்தனை நாள் என்ன பண்ணினார்கள் வாசியாமல்? 40, 35 இருக்குமே வயசு; இனிமேல்தான் சின்னகுழந்தைகளுக்கு இரகுவம்சம்,

அமரம், சப்தம், ஆரம்பஞ்செய்வது; இப்போதிருக்கும் அகத்தியமுன்னமேயல்ல வாயிருக்கவேணும், அதுவும் உங்களகத்தியமல்லவா பலமாயிருக்கிறது; என்னயிருந்தாலும் உங்கள் பிள்ளைகள் மண்டுக்கள்தான்; என்னபிள்ளைகள், அணிப்பிள்ளைகள் தென்னம்பிள்ளைகள்; பிள்ளைகளைப்பெற்றுவிட்டாலாய்விட்டதா? எதற்குங்கொடுத்துவைக்கவேணும், உங்களுக்கு மக்களினுல் துக்கமேதவிர, சுகமில்லை. பெண்கள் தானென்ன வாழ்கிறது. ஒருத்தியைவிடஒருத்தி, சூர்ப்பனகையுந்தாடகையுந்தான். ஏதோ ஜன்மாந்திர பாபந்தான்; அதையெல்லாஞ்சொல்லிக்காரியமென்ன? நம்ப பாடு நமக்குத்தலைக்குமேலிருக்கிறது. அண்ணு! என்னமோ வார்த்தைக்குமேல் வார்த்தை வளர்ந்தது, நீங்கள் சாதுக்கள் என்பேரில் கோபம்வேண்டாம், ஒரேவார்த்தை சொல்லுகிறேன், நீங்களேதான் புராணுர்த்தம் சொல்லவேண்டும். இருமலுக்காக இரண்டுசேர் பால் வாங்கி சீனிபோட்டுக்காய்ச்சி தினம் நிவேதனத்திற்கு வைக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்; புராணமுடியவிட்டு நீங்கள் சாப்பிட்டுவிடுங்கள், இருமலுமதிகமிராது உங்களுக்கும், உங்களுடைய தம்பி நாகேசுவர சாஸதிரியளுக்கு பிறகு நல்ல கற்றறிந்தவர்கள் யார்? இவ்வூரிலிருக்கும் உங்களிரு பிள்ளைகளும் உபயோகமற்றவர்களாய்ப்போய்விட்டார்கள். நல்ல நல்ல சாதுக்களெல்லாம் போய்விட்டார்களே! ஆகா! சாமி தீக்ஷிதர் என்ன? ஸ்ரீனிவாச சாஸதிரிகளென்ன? எல்லாருமா போய்விடவேணும், இந்த ஊர் மகிமையே போய்விட்டது. சுத்த சில்லுண்டிகளும், அல்பத்தடியன்களும், பரிசாரகப்பயல்களுமா அன்னக்காவடியாய்த் திரியவேண்டும்! சாது ஜனக்களஞ்சியமாகவல்லவோ சொல்லிக்கொள்ளுகிருர்களிந்த ஊரை. பிராணேசுவரியின் கிருபைதான். உப்புக்கற்கள் மாதிரி நீங்களிருவர்தான் பெரியோர்களாயிருக்கிறீர்கள் உங்கள் சுத்த மூடாத்மாக்களான புத்திரி புத்திரர்களையும் சமமாய்ப்பாருங்கள்."

விருத்தர்: அப்பா சீனு! உன் வார்த்தையத்தட்டுகிறதில்லை. இந்த வருஷம் நானிருக்கிறேன். புராணம் வாசித்து அர்த்தஞ்சொல்லுகிறேன்.

ஸ்ரீநி. அண்ணு! நீங்களே அர்த்தஞ்சொல்லுங்கள். இராமநாதனெருநாளும், சுந்தரமொருநாளுமாய் வாசிக்கட்டும்; வரும்படியை மாமூல்படி பங்கிட்டுக்கொண்டு சண்டை சச்சு இல்லாதிருங்கள். பால் வாடிக்கையாய்ப் போட ஏற்பாடு செய்கிறேன். மெள்ள போங்கள், பத்து பதினேறு நாழிகையிருக்கும்போலிருக்கிறதே. ஏதோ இன்று நான் வாசிக்க நேர்ந்தது. தினமுமெங்கே ஒழிகிறது." என்று பின்னும், "அண்ணு! என்னமோ வாய்க்கு வந்ததைப்பிதற்றினேன், கோபம் வேண்டாம், தெரிந்துந்தெரியாமலு மொழிந்ததை மனதில் வைக்கவேண்டாம். அபசாரத்தை க்ஷமிக்கவேணடும்." என்ருன். அதற்குப்பெரியவர், அப்பா கண்ணு! அப்படிக்கொன்றுமில்லையே, உன் வார்த்தையோ, நயபயத்துடன், இந்தத்துடிப்பசங்களுக்கு புத்தியை கற்பிக்கக்கூடியதாய் அமிர்தம் சொரிந்தாப்போலிருந்தது. இப்படிச்சொல்லுகிறவர்களார், இந்த ஜடாத்மாக்களுக்கு?" என்றேகினர். லக்ஷ்மி வீதப்படி கொண்டுபோனதுபோக, மீதி சுவயம்பாகம், தேங்காய், பழம் வகையராக்களை சுந்தரம் எடுத்துக்கொண்டு தன் பிதாவைத்தொடர்ந்தான். ஸ்ரீநிவாசனும் அங்கிருந்த, ஆஸனப்பலகைகள் பூஜைபீட முதலிய சாமான்களை தன்னில்லாளைக் கூப்பிட்டு உள்ளேகொ

ண்டு போகும்படி சொன்னான். சாமான்களுள்ளே கொண்டுபோய் சேர்க்கப்பட்டன. பிறகு ஸ்ரீனிவாசய்யர் தன்வேலைக்காரனாகிய வேலாயுதத்தைப்பார்த்து, "பால்காரி தைலியை தினம் இரண்டுசேர் பசிம்பால் சுத்தமாய்க்கொண்டுவந்து போடும்படி திட்டஞ்செய்யென்று கட்டளையிட்டார். அவனுமவ்வாறு செய்வதாய்ச்சென்றான். ஸ்ரீனிவாசய்யர் "நாழிகையாய்விட்டதே, ஆபீசுக்கும் போகவேணுமே" என்றுள்ளே சென்றார். இரங்கசாமியும் அவர்பின்னாலேயே அவருடைய விசாலமான பெரிய வீட்டிற்குள் சென்றான்.

இன்னும் வரும்.

இரவலர்.

இது நிற்க; கல்லாதவர்களை,

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்,"
"விலங்கொடு மக்களனையரிலங்கு நூல்
கற்றாரோடனையிவர்,"

என்று முதற்பாவலர் நிஷேதித்திருப்பதாலும், அன்றியும்,

"மேற்பிறந்தாராயினுங்கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு,"
"நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே,"
"கல்லாவொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே,"
"களர் நிலத்துப்பிறந்த வுப்பினைச்சான்றோர்
விளைநிலத்து நெல்லின்விழுமிதாக்கொள்வர்
கடைநிலத்தோராயினுங் கற்றுணர்ந்தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்."
"ஆக்குமறிவானலது பிறப்பினால்
மீக்கொளுயர் விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார ரவின் பருமணிகண்டென்றுங்
கவரார் கடலின் கடு,"

எனப்பெரியோர் ஜாதியினாலுயர்வு தாழ்வின்று கல்லாமையே யிழிவைத்தரத்தக்கது எனக்கூறியுள்ளாராதலால், இந்திரியநுகர்ச்சி யில்லாதவர்கட்கு விஷயதாரதம்மியந்தோன்றாதவாறுபோல, மூடர்,

"அறிவுடையாரன்றி யதுபெறார் தம்பார்
செறிபழியையஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாழ்விழியே யன்றிமறைக்குருட்டுக்
கண்ணஞ்சுமோ விருளைக்கண்டு."
"பூவாதே காய்க்குமரமுமுள மக்களுளு
மேவாதேநின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகாவித்தெனவே பேதைக்
குரைத்தாலுந்தோன்றா துணர்வு."

என்றவண்ணம் தொழிலினுயர்வுமிழிவும் தாமேயுமுணரார்; சொல்லினுங் கேளார்; ஆதலின், அன்னோரையொருபொருளாக யாமதிக்கின்றிலேமாயினும வருநாளுமபலர்,

"நெருப்பினுட்டு ஞ்சலுமாகுமிரப்பினுள்
யாதொன்றுங்கண்பாடரிது."
"இன்றும வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு."

என்னுமாறு வறுமையை மிக்கனுபவிப்பினும, இயல்பாகவே யிரத்தற்றொழிலை மேற்கொள்ளாது

"ஓவாவறுமையுழந்தாலுமற்றொருவ
ரேவா துயிர்வாழ்ந்திருத்தலே நன்றாகுந்
தாவாதசெல்வந்தருமேனுங்குற்றேவ
லாவாகொடிது கொடிதென்பாருமாயினர்."

என்று ஏவற்றொழிலை நிகிருஷ்டமாகச்சொல்லி யிருப்பினும் அத்தொழிலிரத்தலினுஞ்சிறந்ததெனக்கொண்டு இழிந்தோர்பாலாயினும், ஊழியஞ்செய்து ஜீவித்து வருகின்றனர். அன்னோரன்றோ அறிவுடையோரால் மானமுடையாரென மதிக்கற்பாலார்.

இனி, யெஞ்சிய செல்வரைப்பற்றியுஞ்சிறிது கூறி எடுத்துக்கொண்டவிஷயத்தை முடிவு செய்வாம்.

பணக்காரர்கள் கோயில், குளம், சத்திரம், தண்ணீர்பந்தல் முதலிய திருப்பணிகளையும், உச்சவம், கும்பாபிஷேகம், சமாராதனைகளையும் வியாஜமாகக்கொண்டு பிச்சை எடுத்துப்பணம் சம்பாதிப்பார்கள். இயல்பாகவே செல்வர்கள்,

"பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லை பொருள்;"

"இல்லாரை யெல்லாருமெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ்செய்வர் சிறப்பு;"
"கல்லானேயானாலுங்கைப்பொருளொன்றுண்டாயி
னெல்லாருஞ்சென்றங்கெதிர்கொள்வார்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீண்டெடுத்த தாய் வேண்டாள்
செல்லாதவன் வாயிற்சொல்."

என்றவண்ணம், எல்லாராலும் மதிப்புள்ளவர்களாயிருத்தலால், அவர்கள் பிக்ஷை யேற்கப்புறப்படுங்கால், அவர்கள் தாக்ஷிண்யத்திற்கே யுட்பட்டு வறியஜனங்களும் தங்கள் சக்திக்கதிகமான பணத்தைக்கொடுத்துவிடுவதும் போதாமல், கிரிமினலதிகாரிகளையும் நெருப்புடன் காற்றுச்சேர்ந்தாற்போல் துணைக்கொண்டு,

"வேலோடு நின்றானிடு வென்றதுபோலுங்
கோலோடு நின்றானிரவு;"

என்றவண்ணம், ஜனங்களை பயமுறச்செய்துப்பிடிக்கின்றார்கள். அன்றியும் அன்னோர் தங்கட்கு நோய் முதலிய துன்பங்கள் நேர்ந்தபொழுது தங்களிஷ்டதேவதைக்கு அத்துன்பங்கள் நிவர்த்தியாகும்பொருட்டு கிராமங்களில் புகுந்து பிக்ஷையேற்றுண்கின்றேனென்று பிரார்த்தனை செய்துகொண்டதாய்க்கூறி யாசிப்பதுமுண்டு. இவர்களிடுக்கணுற்றபொழுது சொந்தப்பணத்தைச்செலவழிப்பதாய் பிரார்த்தனை செய்வதைவிட்டு பரதிரவியங்களையபகரிப்பதாய் பிரார்த்தனை செய்வதை யோசிக்குமிடத்து, சாலச்சிரிப்புக்கிடமாகின்றது. அரிய செயலாகிய பிக்ஷை கொடுப்பதைவிட்டு எளிய செயலாகிய பிக்ஷையேற்பது

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்."
"தடுத்தலரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தலரிதோ விளம்பு."

என்றவாற்றால் அவர்களுடைய தீயதொழிலென்று துணியப்படும். அன்றியும் பணமுடையார் தர்மஞ்செய்வதையும்' ஏழைகள் தர்மஞ்செய்வதையும் அவரவர் வரும்படியைக்கொண்டு சீர்தூக்கிப்பார்க்குமிடத்து வறியவர்கள் கொடுப்பதே அன்னோர் வரும்படிக்கு மிகுதியாகக்காணப்படும்.

இத்தகைய பிரபுக்கள் வீட்டிற்கு தப்பித்தவறி யாவராயினுமோர் அதிதி வரப்பெற்றால் சங்கத்தைப்போல் சுரித்த முகத்தைக்காட்டிக்கொண்டு மௌனஞ்சாதித்தாயினும் 'மேலைவீடுகேள்' 'கீழைவீடுகேள்' என,

சிறு ஞாளிபோலேறிவீழ்ந்தாயினும் துரத்திவிடுவார்கள். இன்னோர் ஐயம் ஏற்பதற்குக்காரணம் யென்னை யெனின், பட்டினத்தார்,

"ஆற்றோடுதும்பையணிந்தாடும்மம்பலவாணர் தம்மை
போற்றாதவர்க்கடையாளமுண்டே யிப்பூதலத்தில்
சோற்றாலியற்று சுகமற்று சுற்றத்துணியுமற்று
ஏற்றாலுமபிச்சைகிடையாமலேக்கற்றிருப்பர்களே"

என்றருளிச்செய்தமையால், கடவுளின் கிருபை நமக்குண்டோ இன்றோவென்பதை பிக்ஷை கிடைப்பதனாலும் கிடையாமையாலும பரிக்ஷித்தறியும்பொருட்டு யாசிககின்றனர்போலும்; அற்றாயின்

"இலர் பலராகிய காரணநோற்பார்
சிலர் பலா நோலாதவர்."

என்றபடி, தாங்கள் செல்வவந்தர்களாயிருப்பதினாலேயே கடவுளனுக்சிரகமுண்மையை யறியாமல் பிக்ஷையேற்றறியப்புகுந்த

"தேவரனையர் கயவரவருந்தா
மேவனசெய்தொழுகலான்,"

என்றவண்ணம் தங்களை தேவர்களாக மதிப்பார்களென்றெண்ணிப்போலும்; இவர்கள் பிக்ஷை எடுப்பதில் இன்னொரு விசித்திரமிருக்கின்றது: அஃதென்னையெனின், மூடர்களாயிருப்பினும் சாத்தியப்படாத சமயத்தில் உள்ளூரில் பிக்ஷை எடுப்பதற்கு வெட்கமுற்று தூரதேசத்திற்போய் பிக்ஷையெடுத்துப்பிழைப்பர். இவர்களோ, பலருமறியும்படி வாத்தியகோஷத்துடன் உள்ளூரிலேயே பிக்ஷை எடுப்பதுதான்.

"நன்றறிவாரிற் கயவா திருவுடையர்
நெஞ்சத்தவல மிலர்,"

என்ற வண்ணம் இரத்தலாகிய விழிதொழிலை செய்கின்றோமேயென்று துக்கமுறாமல் செருக்குற்றிருப்பது அவரதியற்கையாம்.

அன்றியும், இன்னோர் யாசகத்திற்காக வருவதையுணர்ந்த வறியஜனங்கள், தத்சமயத்தில் ஒன்றுங்கொடுத்தற்கியலாமையால், ஒளித்துகொண்டவர்களையும் ஜாப்தாவிற்பதிந்துகொண்டு, அவர்கள்பால் வேலையாட்களையேவி, சர்க்காரில் நிலவரி வசூலிப்பதுபோல், அவ்வேழைச்சனங்களை வருத்துவதால் தங்கள் வீட்டுவாயிலில் அவர்கள் சத்தங்கேட்டபொழுதே திருவிடைமருதூரில் தன்னைப்பிடித்திருந்த பிரமஹத்தியினின்றும் விடுபட்டு ஓடின வரகுணபாண்டியனைப்போல், கொல்லைவழியாய் ஓட்டம்பிடிக்கின்றார்கள். இத்தகையசெல்வர்கள் தங்கள் சொந்த நிலத்தில் சாகுபடிசெய்யுங்குடிகளை நிர்ப்பந்தித்து அங்கிலவரியை வாங்குமாறுபோலவே, இதையும்

அவ்வரும்படிகளிலொன்றாகக்கொண்டுவருந்துகின்றனர்போலும்இதுநிற்க.

அந்தணர்கட்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல் வேட்பித்தல், ஈதல், ஏற்றலென அறுவகைத்தொழில்கள் ஏற்பட்டிருத்தலால் அன்னோர்க்கு இரத்தல் சாலுமெனின், அவ்வந்தணர்கள் முதற்கட்கூறிய ஐந்தொழிலையுஞ் செய்வதைவிட்டு விட்டு ஆறாவதாகக்கூறிய கடைத்தொழிலையே பிரதானமாக்கொண்டது பரிஹாஸத்திற்கிடமாம். அந்தணர்கட்கிரத்தற்றொழிலை ஸ்மிருதிகளில் விதிக்கப்பட்டிருப்பது, அவ்வேற்றலுக்கு முற்படக்கூறிய ஐந்தொழிலையும் செய்வதற்குச்சாதகமாயிருக்கும்பொருட்டேயாதலால், அவைகளொழிந்த அந்தணர்கட்குரித்தாகாத பிறதுர்வியாபாரங்கட்கு சாதகமாகக்கொள்ளும்பொருட்டன்று. இப்பொழுது பிரத்தியக்ஷத்தில் அந்தணசிரேஷ்டர்களாயுள்ளார் இரத்தற்றொழிலைப்பெரும்பாலும பரித்யஜித்து ஏனையதொழிற்களைப்புரிந்து வருகின்றார்கள்.

உலகத்தில் அபூர்வமாவிருக்கின்ற சில தர்மிஷ்டர்களை, அளவிறந்த இரவலர்கள்யாசித்து வறியவராககுதலால் அத்தர்மிஷ்டர்களைக்கண்ணுற்ற திரவ்யவந்தர்கள் தங்கள் பணத்தை, புதையலைப்பூதங்காப்பதுபோல ஈ எறும்புகட்கும் பயன்படாதபடி பாதுகாக்கின்றார்கள். அதனா மொண்டி, முடம், கூன், குருடர், பாலர், விருத்தர் முதலிய அனாதைகட்கும் சோறு கிடைப்பதரிதாகின்றது. இவ்விரவலர் ஒவ்வொரு பெரிய குடும்பங்களில ஒவ்வொருவரையாசிரயித்து, அவர்கள் இன்னோர் தாக்ஷிண்யத்திற்குட்பட்டு யாதாயினுமொன்றை யுபகரிப்பதினால், அவருடைய தாய், தந்தை, மனைவி, புத்திரர், சகோதரர் முதலினோர் விரோதித்துக்கொண்டு பெருங்கலகம் விளைவிக்கவும் செய்துவிடுகின்றனர். அத்தகைய? செய்கை தேகக்கூற்றை யுணரப்பெறாத ஓர் வைத்தியன்? ஒருவனுக்கு மருந்து கொடுத்து வாதபித்த கிலேஷ்மங்களாலாய நோயை யதிகரிக்கப்பண்ணி அவனுயிர்க்கானி தேடுவதுபோலும். இவ்விரவலரும், திருடர்களும், வறியவரையுஞ் செல்வரையும் பீடித்துப்பயனடைவதாலும், கொடாதாரை இரவலர் வைதலும் திருடர்களடித்தலும், இரவலர் கேட்டபகரித்தலும், திருடர்கள் கேளாதபகரித்தலுமாகிய செயல்களி தம்மில் வேறுபட்டிருப்பினும் பிறர் பொருளைக்காண்புழியதனைப் பெறவேண்டுமென்னும் அவாவினால் வாய்நீரூறுதலானும, பொருளுடையார் துன்புறும் வண்ணம் அவர் முன்றோன்றுதலானும், எவர்பாலெதனைப் பெறலாமென்ற வெண்ணத்தாவ் ஊர்தோறும் வீடுகடோறுந்திரிதலானும், மறுமையினிரையத்துன்பெய்துதலானுந் தம்மிலொப்பார்.

" தீயினாற்சுட்ட புண்ணுள்ளாறுமாறாதே
நாவினாற்சுட்ட வடு,"
" வில்லம்பு சொல்லம்பு மேதினியிரண்டுண்டு

வில்லம்பிற் சொல்லம்பே மேலதிகம்,"

என்றவண்ணம், திருடர்களடிககஞ்சுவதைப்பார்க்கிலும் இரவலர்கள் வசவிற்கே மிகவுமஞ்சப்படுகிறது.

"கூற்றிறகொடியாரிரவலரே கூறுங்கா
வேற்கடுப்படுவோரெதிர்காணில்—கூற்றுக்குத்
தாமொளியார் தம்முயிருந் தாம்பகிர்வார் மற்றவர்க்குத்
தாமொளித்தோடுமதனால்."

இதனாலிரவலர் எமனைப்பார்க்கிலுங் கோரரூபமுடையாரெனச் சொல்லப்படுகின்றது.

இவ்விரவலராகிய துஷ்டர்கள் பிறர்க்குப்பொருட்கேடு சூழ்வதுமன்றி தாமு மிம்மையிலவமானத்தையுமறுமையில் நரகத்தையுமடைகின்றனர்.

"இரப்பனிரப்பாரை யெல்லாமிரப்பிற்
கரப்பாரிரவன் மினென்று."

எனத்திருவள்ளுவ நாயனார், கரவாதாரிடத்து யாசிக்கவேண்டுமாயின் யாசித்துக்கொண்மின் என்று விதித்திருக்கின்றனரே யெனின், அவ்வாறு ஹிதோய தேசங்கூறியது உலகத்தில் கரவாதுவந்தீயுமவர் மிக அரியராகவின் இரத்தற்றொழிலை சுருங்கப்பண்ணுவித்துக்கொண்டு

"கரவாதுவந் தீயுங்கண்ணன்னார்கண்ணு
மிரவாமை கோடியுறும்."

என்று விதித்து, அவ்விரவுத்தொழிலை நிரஸ்தயாய் மாற்றுவதற்கே அங்ஙனங்கூறியது.

முற்காலத்திலேயே முதலிடை கடைவள்ளல்கள் இருவத்தொருவரென்னு மெண்ணிக்கையால் கூறப்படுதலாலும்,

"இடுவோர் சிறிதிங்கிரப்போர் பெரிது
கெடுவாய் நமளே கெடுவாய்—படுவாவி
கூவத்து நாரணனைக்கொன்றுயே கற்பகப்பூங்
கா வெட்டலாமோ கரிக்கு"

என்வும்,

"இலர்பலராகிய காரணநோற்பார்
சிலர் பலர் நோவாதவர்,"

எனவும் பெரியார் கூறியதனாலும், ஈகைக்குணமுடையார் மிக அரியரென்று விளங்குகின்றது. அன்றியும்,

"மறந்தாகிலு மரைக்காசுங் கொடாமட மாந்தர்மண்மே
லிறந்தாவதென்ன விருந்தாவதென்ன விறந்து விண்போய்
சிறந்தாளுங் காயற்றுரை சீதக்காதி திரும்பிவந்து
பிறந்தாலொழியப்புலவோர் தமக்குப் பிழைப்பில்லையே."

எனவும்,

"மைப்போதகமும் வளநாடுஞ் செந்தமிழ் வாணர்க்கருள்
கைப்போதக மனையான் சீதக்காதியைக் காத்திருந்த
வப்போதறிந்தில மிப்பாழ்மபணத்தினருமையெல்லா
மிப்போதறிந்தனமீயாத லோபரிடத்திற்சென்றே."

எனவும்,

"பரிக்கொம்பு போலப்பகவான் சரிதைப்பகர்ந்திடினு
முரிக்கம்பதாயினு மீயார் கடனுடனேடிச்சென்று
கரிக்கொம்பு போன்முலை மின்னருக்கீவரக்கன்னியர்கை
நரிக்கொம்பு தானுமுண்டோ வெங்கடாசல நாயகனே,"

இன்னுமிப்படியே அநேகமம்புலவர்களுஞ்சொல்லி யமுதிருப்பதாலுந் தெரிய வருகின்றது.

இக்காலத்திலோ அவ்வளவு கொடுக்குமியல்புடையாரின்மையால் தருமங்கள் மிகுதியுங்குன்றியிருந்தும், இரவலர் மாத்திரமிகுதிப்படுகின்றார்கள்; செல்வவந்தர்கள் பலருளராயினும் 'கொடையும் பிறவிக் குணம்' என்றபடி ஜன்மசுபாவமாய் சிலர்க்குமாத்திரம் தருமகுணமுண்டாவதன்றி பழக்கத்தினால் அக்குணம் யாவர்க்கும் வருவதன்று. சிலர்கள் பழக்கத்தினால் தருமஞ்செய்ய வாரம்பிப்பினும், நாளடைவில் லோபகுணமுடைய செல்வவந்தர்களைக்கண்ணுற்றுத்தாமுங் கொடாமைக்குணத்தினாலேயேதிரும்பிவிடுகின்றார்கள். தருமகுணமுடையார் தருமஞ்செய்வதற்கு

"பெருக்கமொடு சுருக்கம்பெற்ற பொருட்கேற்ப
விருப்பமொடு கொடுப்பர் மேலோர்—சுரக்கு
மலையளவு நின்ற முலையாதே மதியின்
கலையளவுநின்ற கதிர்,"

என்பதனால் இவ்வளவு பொருள் தம்மிடத்திருக்க வேண்டுமென்று நியதியில்லை யென்பதையறிவதில்லை இரவலர்களுமதனை யாலோசிக்கிறதில்லை.

திருக்குறளில் நாயனார், 'அறன்வலியுறுத்தல்,' 'அன்புடைமை,' 'விருந்தோம்பல்,' 'ஈகை,' 'புகழ்,' 'அருளுடைமை,' என்னுமதிகாரங்களில் தருமஞ்செய்யவேண்டுவது அத்தியாவசியகமென்பதை விளக்கி யுள்ளராயினு மத்தருமத்தை யுலகில் சிலராயினும்மேற்கொண்டிலர் என்பதைக்கவனியா

மல் அத்திருக்குறளிலுள்ள 'இரவு' என்னுமோரதிகாரத்தையே நமக்கு வி தியாகக்கொண்டு அதனையடுத்திருக்கிற 'இரவச்சம்' என்னுமதிகாரத்தை லக்ஷியம்பண்ணுமற்றிரிவது இரவலர்க்கழகன்று.

"அற்றமறைத்தலோ புல்லறிவுதம்வயிற்
குற்றமறையாவழி."

என்றவாறு, உலகம் பழிக்குங்குற்றத்தை மறைக்க முயலாமல் யாதுபயனை க்கருதி அரையைத்துணியால் மறைக்க முயல்வது?

இரப்போர்க்கு சுகப்பேறு முண்டன்றோ வெனின், அச்சுகப்பேறு பசையற்றவென்பைக்கவ்விய நாய்சுகப்பேறெய்துவதுபோல்வ தொன்றேயாம்.

இதுகாறுங்கூறப்புகுந்தது யெல்லா விதத்தானு மிரத்தற்றொழிலனுசிதமென்றும், ஏனையத்தொழில்கள் உசிதமென்றும் அறிவுடையார்க்கு வுணர்த்துதற்கேயாம்.

சமாசாரக்குறிப்புகள்.

கொள்ளை:—ஸ்ரீரங்க இரங்கநாதசுவாமி கோயிலில் நாளது ஜூன்மீ 15ஐ இரவில் திருட்டுப்போனதாய் பிரஸ்தாபம் வந்தபின், போலீஸ் சூபரின்டெண்டு மிஸ்டர் கிளாக்ஸ்டன் (Mr. Clogston) துரையவர்கள் டவுன் போலீஸ் இன்ஸ்பெக்டருடன் வந்து திருட்டுப்போன ஜாகாவை பார்த்ததில், விமானத்தில் ஆள் நுழையத்தகாத கன்னவாசல் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, இந்த திருட்டு கன்னவாசல் வழியாய் திருடர்கள் புகுந்து திருடவில்லையென்றும், சன்னிதிவாசலின் வழியாகவே திருட்டுப்போயிருக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். சன்னிதி கதவுகள் பேதிக்கப்படாமலிருந்தால் பெருமாளுக்கருகில் போகத்தகுந்த அதிகாரமுள்ளவர்களாலேயே இத்திருட்டு நடந்திருக்கவேண்டுமெனக்கருதி கோயிலாசாமிகளிற்சிலரை அரஸ்டு செய்து, வீடுகளிலுஞ்சோதனைபோட்டு கோவில் டிரஸ்டி ஸ்ரீமான் சேஷாத்திரி அய்யங்கார் அவர்களுடைய உதவியினால் ஷை சூபரிண்டெண்டுதுரையவர்களும் ஸ்டேஷனரி சப்மாஜிஸ்திரேட்டாரவர்களும் விசாரித்துக்கொண்டுவருகிறார்கள். திருட்டுப்போன சொத்து லக்ஷ ரூபாயிக்குமேலிருக்குமென்று மதிப்பிடுகிறார்கள். இப்போது பெருமாளுக்குத்திருவாராதனஞ்சிலநாள் நிறுத்தப்பட்டிருந்து இப்போது நடந்துவருகிறது.

திருத்தலையூர் என்னும் அறுபத்துமூவரில் உருத்திரபசுபதிநாயனா் யென்பவர் வழிபட்ட சிவஸ்தலத்தில், சென்ற வைகாசி மாதத்தில் திருடர்கள் கோயிலுக்குட்புகுந்து அம்மனைப்பிடுங்கி, கீழே தள்ளி, கீழே போடப்பட்டிருந்த சுவர்ணத்தகடு இரத்னமுதலியவைகளை யெடுத்துக்கொண்டு இன்னுஞ்சில சிலா விக்கிரஹங்களையும கீழேதள்ளி கலாசோதனை பண்ணிவிட்டுப்போய்விட்டார்கள். அம்மனிடத்தில் சிந்திக்கிடந்து எடுக்கப்பட்ட ரத்தினங்கள் ஆயிரரூபாயிக்கு விலைமதிக்கப்படுகின்றன. அம்மன் கீழே விழுந்ததில்பின்னமாய் போயிற்று. அந்த கோயில் சுவாமியை இஷ்டதேவதையாய் பரம்பரையாக வகித்திருக்கும் காட்டுப்புத்தூர் மிட்டா மீந்தாரவர்கள், வேறு அம்மன் பிரதிஷ்டைபண்ணுவதாய் உத்திரவளித்திருப்பதாக கேள்விப்படுகிறோம்.

இக்காலத்தில் அனேகதேவஸ்தானங்கட்கு, சரியான வரும்படிகளிருந்தும் அவைகளை விசாரணைசெய்பவர்கள் சரியாய் நடத்திவரவில்லையென்னும் அவதூறு யெங்கும்பரவியிருக்கின்றது. அதுவும்போதாமல் விரைக்கோட்டையைப்பெருச்சாளிகள் சூறையிடுவதுபோல், திருடர்களும் தேவஸ்தானங்களை பாழ்பண்ணபுறப்பட்டால் தேவஸ்தானங்களெப்படி முன்னுக்கு வரும்? இவ்வண்ணம் நடத்துவது கடவுளுக்குச்சம்மதமபோலும்.

நாளது சூன்மாதம் 9வ சித்ராவில் பூகம்பமுண்டாயிற்று. இத்தகைய பூகம்பங்கள் சமீபகாலத்திலேயே இரண்டு மூன்று தடவைகளிலுண்டானமையால், ஆரியமத சித்தாந்தத்தின்படி உலகததிற்கு எனன தீங்கு விளையுமோ தெரியாது.

நாளது சூன்மீ 26வ எட்வார்டு vii சக்கிரவர்த்தியின் முடிசூட்டும் உச்சவத்தைக்கொண்டாட உள்ளூர் ஜமீந்தாரவர்களும், இங்கு முகாம் செய்திருந்த முசிரி டிவிஷன் டிப்டிகலெக்டர் அவர்களும், சப்மேஜிஸ்திரேட்டார் அவர்களும், பிராமணபோஜனம், தேவாலயங்களில் சுவாமிபுறப்பாடு முதலிய விபவங்களைச் செய்ய ஏற்பாடு செய்திருந்தனர்.

நிர்மலமான ஆகாயத்தினின்றும் ஓரிடி விழுந்தாற்போல் சக்கரவர்ததியவர்கட்கு தேக அசௌக்கியமாயிருப்பதாய் அவசர தந்தி சமாசாரம் வந்தமையால் அவ்வுச்சவம் கொண்டாடாமல் நிறுத்தப்பட்டது. அதனால் சர்வஜனங்களின் ஆசையானது வியசனமாய் பச்சோந்தி நிறமாறுவதுபோல் மாறிற்று. இனி இவ்வுச்சவம் யென்று நடக்குமென்று ஒருவரையொருவர் வினவி ஆவலுடன் கடவுளை பிரார்த்திக்கின்றார்கள்.

(Before Mr. Justice Benson and Sir V. Bhashyam Aiyangar.)

காரெட் ஆமேட் (Karet Ahmad) என்னு மகம்மதிய திருடனுக்கு

மலபார் ஸ்பெஷல் அஸிஸ்டாண்டு மாஜிஸ்திரேட்டாரால் இரண்டு வருஷங் கடுங்காவலும் 30 அடி அடிக்கவும் சிக்ஷை விதிக்கப்பட்டது. மெடிகல் ஆபீசர் 30 அடி தாங்க சக்தியற்றவனென்று அபிப்பிராயப்பட்டதின் பேரில் அதற்குபதிலாக பின்னுமொருவருஷம் அதிகப்படுத்தப்பட்டது. குற்றவாளி ரிவிஷன் மனுகோடுத்ததின்பேரில் ஹை கோர்ட்டார் கி. பு. கோ. 395-வது பிரிவுப்படி கீழ்கோர்ட்டாருக்கு காவல், அபராதம், அடியென்னும சிக்ஷை விதிக்க அதிகாரமிருந்தாலும், 32-வது பிரிவுப்படி முதலாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டாருக்கு இரண்டு வருஷத்துககுமேல் தண்டனை விதிர அதிகாரங்கொடுக்கப்படாமையால் அதிகமான ஒரு வருஷத்தை ரத்துசெய்துவிட்டார்கள் என்று சென்னை ஸ்டாண்டர்டு பத்திரிகை கூறுகிறது.

கதாப்பிரஸங்கம்.

இனி இரண்டாவதாகப்பகுத்துக்கொள்ளப்பட்ட பாகவதர்கட்குட் சிலர் பக்திசம்பூரணமான கதைகளாகிய சோற்றேனைப்பெய்து, சேட்குனர் எலும்புகள் நெக்கு நெக்காயுருகி சித்திரபிரதிமைகளைப்போல அசைவற்றிருந்து, தங்கள் தங்கள் மனசுகளையும், கண்களையும், செவிகளையும் தாங்கள் கூறும் அர்த்தவைபவங்கட்கும், செய்யுமபிநயங்கட்கும், பாடுகின்ற கானங்கட்குமுறையே காணிக்கையாகத்தரப்பெற்று, ஆனந்தக்கடலில் அன்னோர் மூழ்குவண்ணம் அமிழ்த்திவிடுகின்றூர்கள். அன்றியும், இடையிடையே தாயுமானவர், பட்டிணத்தார், சிதம்பரம் இராமலிங்கம பிள்ளையவர்கள், ‘கன்னற்பாகிற் கோற்றேனிற் கனியிற்கனிந்த கவிகளையும்,’ தேவாரம், திருவாசகம், நாலாயிர பிரபந்தமுதலிய அதிமதுரத்தமிழ்ச்செம்பாடல்களையும், வடமொழியிற் பகவத்கீதை, பாகவதம், சூதஸம்ஹிதை, தரங்கம் அஷ்டபதி, இராமாயணம், மற்றும் புராணங்களிலுமுள்ள சடலோசமுதவியவைகளையும் ஆங்காங்கு உசிதமான சந்தர்ப்பங்களில் பெய்து, பாடி, பக்திவெள்ளத்தில் யாவருமூழ்குமாறு பக்தசிரோமணிகளாய்விடும்படி செய்கின்றூர்கள்.

மற்றும்பல பாகவதர்கள், கிராமங்கடோறும் காலக்ஷேபார்த்தம் கதைசெய்யப்புகுந்து பிழையறக்கற்கப்படாத தமிழிலுந்தெலுங்கிலும ஸம்ஸ்கிருதத்திலுமிந்துஸ்தானி முதலிய பாஷைகளிலுமுள்ள கவிகள் பதங்கள் கீர்த்தனங்கள், சிந்து லாவணி டப்பா தங்கப்பாட்டு முதலியவைகளைப்பாடியும, தாங்கள் செய்யுங்கதைகளினிடையிடையில் கர்மாதுரமான பாடல்க

ஊ பெருப்பாலுமுபயோகித்து கதைகேட்கவந்திருக்கும் ஸ்திரீபுமான்கட்கு பக்தி என்பது சிறிதுமுண்டாகாதபடி காமவெள்ளம் பெருகுவித்து,

"வையமபற்றிய மங்கையரெண்ணிலா
ரையன் பொற்புக்களவிலையாதலா
லெய்யுமம்புக்கு மாரனுமெனசெய்வான்
கையமபற்றுடைவளிலுங்கை வைத்தான்".

என்னுங்கம்பராமாயணச் செய்யுளின்படி, மன்மதன்தன்னம்புப்புட்டிவில் பூங்கணைகளுள்ளவைகளையெல்லாமெய்துவிட்டு பின்னுமெய்வதற்கு பாண மின்மையால் வாட்மோருஞ்செய்யும்படி அவனுக்கு பிரயாஸயான வேலை வைத்துவிடுகிறார்கள்.

அன்றியுமச்சபையிலிருக்கின்ற பக்தசிரோமணிகள் இத்தகைய பிர ஸங்கங்களைச்கேட்டு கிணறுவெட்டப்பூதம புறப்பட்டதுபோல் பக்தசரித்தி ரங்களைக்கேட்க வந்த விடத்து பகை பாவமச்சம்பழியென விநான்கிற்கும் காரணமாகவுள்ள காமப்பேய் வந்துவிட்டதே என்று நடுங்கி தாங்களிருந்த விடத்தை காமாதுரர்கட்கு சமர்ப்பித்துவிட்டுப்போய்விடுகின்றார்கள். இ த்தகைய பாகவதர்கள் செய்யுங்கதைகட்கும், தாசிகளின் நடனசபைக்கும் வேறு பாடுசிறிதுமின்று. நாட்டிய ஸ்திரீகள் அபிநயமுதலியவைகளாலாட வர்களை மயக்கி மிக்கப்பொருளைக்கவர்ந்து செல்லுமாறுபோல் இவர்களும் பொருளிலேயே நோக்கமுடையவர்களாய் சபையிலிருப்பவர்களையே மாற்றி க்காசுபறிக்கின்றார்கள்.

சுமார் ஐம்பது வருஷங்கட்குமுன் சோணாட்டினின்று வரகூர் கோபால பாகவதர் என்னுமோர் பெரியவர், இத்துறையூருக்கு வந்திருந்தன ர். அவர், உபநிஷத்துக்களிலும், வேதங்களிலும், சாஸ்திரங்களிலும பிர வீணராயும், நித்தியகர்மானுஷ்டானங்களை உரிய காலங்களிற்றவறுமல் விதி ப்படி செய்பவராயுமிருந்தனர். நாடோறும் பிராதஸ்நானஞ்செய்து நித்யா னுஷ்டானங்களை முடித்துக்கொண்டவுடன், தமதுசிஷ்யர்களோடு தரங்க ம் அஷ்டபதி முதலிய கீர்த்தனங்களை பக்கவாத்தியங்களுடன் பக்திரஸம் ஆங்காங்குகசிந்தொழுக பாடிக்கொண்டு அக்கிரகாரவீதிகளெல்லா ம்பிரத க்ஷணமாய் உஞ்சவிருத்திசெய்துவருவார். இவர் உஞ்சவிருத்திக்குப்புறப் படுஞ்சமயங்களில், பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் வேணு கானத்தைக்கேட்ட கோபஸ்திரீகளும், பசுபக்ஷி முதலியவைகளுமனமுருகி மெய்சிலிர்த்து பரவசப்பட்டு நின்றதாய் பாகவதமுதலியவைகளில் கூறியிரு ப்பதைப்போலவே இவருடைய கானத்தைக்கேட்ட சர்வஜனங்களும் புள காங்கிதமுடையவர்களாய் அவர் தமது விடுதி கிரகத்திற்குச்செல்லும்வரை யில் அவரைச்சூழ்ந்து செல்வார்களேயொழிய ஒருவருயினுமவரைப்பிரிந்து செல்வதற்குக்காலெழார்கள். இன்னும் வரும்.

NOTICE.

Although there are several journals world-wide, yet we request the learned public to lend a helping hand towards the advancement of this journal also.

அறிவிப்பு.

உலகிலுள்ள ஜனங்கள் புருஷார்த்தங்களை அறிந்தனுபவித்தற்கு, பத்திரிகைகள், தருமாதிகளை அன்னோருக்கு ஞாபகப்படுத்திக்கொண்டு சஞ்சரிப்பவைகள் பலஉளவாயினும், வித்வான்கள்பாஷைய நல்லொழுக்கமும அபிவிருத்தியடைவதில் நோக்கமுடையவர்களாகலின், இந்நூதனத்தமிழ்ப் பத்திரிகையையும ஆதரிப்பதற்குக்கடமைப்பட்டிருத்தலால், அத்தகைய கல்விமான்கள் இடையில் தளர்ச்சியடையாவண்ணம் பாதுகாத்து உதவி செய்துவருவார்களென நம்புகிறோம்.

அறிவிப்பு.

திருச்சிற்றம்பலம்.

வானளவு நெடுங்கோட்டுச்சதுரகிரியெனுவரைமேன் மன்னியென்றுந்
தேனளவு மென்மொழித்தா யம்மையெனும் பெயர்வாய்ந்த தெய்வக்கற்பின்
மானளவு விழிக்கிடமீந் தருணறப்பளீச்சுரனை மதியகத்திற்
கூனளவு மதிச்சடிலப் பெருமானை யுழுவலன்பிற் குறித்து வாழ்யாம்.

ஆனாதிமலமுக்தராகிய பரமேசுரர் அனாதிமல பெத்தராகிய வான்மாக்கட்கு அனுக்கிரகிக்கும் வண்ணம் எழுந்தருளியிருக்கின்ற சிவக்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளும், சித்தபுருடர்கட்கும் யோகீசுரர்கட்கும் வாஸஸ்தானமாய் சிறப்புற்றதும் தக்ஷணகைலாய மேலச்சிதம்பரங் கொல்லிமலை சதுரகிரியென்னும் பெயர்பெற்றதும், திருநாவுக்கரசுசுவாமிகளால் 'கொல்லிக்குளிரறப்பள்ளி' யெனவும், 'திகழ்கொல்லியறப்பள்ளி' யெனவும், தேவாரப்பதிகங்களில் விதந்தோதப்பெற்றதுமான அறப்பள்ளீசுரமலையிலிருக்குஞ் சிவாலயமானது நிர்மானுஷ்யமான காட்டிலிருப்பதானும், அவ்வாலயத்திற்கு உச்சவ காலங்களில் தரிசனத்திற்காக யேராளமான ஜனங்கள் தூரதேசத்தினின்றும் வருதலானும், அவ்வமையங்களில் மழை வருஷிப்பதால் தரிசனத்திற்கு வருமடியார்கள் நனைந்து குளிரினால் வருத்தமுறுவதானும், அவ்வாலயமே சுவாமிக்கு மாத்திரமன்றி பிறருக்கிடங்கொடா வியல்பினை யுடையதாயிருப்பதானும் அங்கனமெப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கின்ற சித்தர்கட்கும் யோகிகட்குங் குகைகளைத்தவிர வஸதியாகத் தங்குதற்கோரிடமின்மையானும், அச்சிவாலயத்தின் சமீபத்தில் ஓர் திருமடமிருத்தல் வேண்டுமென்பது அவ்வாலயத்திற்சென்று தரிசிக்குஞ் சிவனடியார்கள் யாவருக்குமொப்ப முடிந்த கருத்தேயாம்.

அத்தகைய திருமடத்திருப்பணியை, அத்யுன்னதமான மலையின்மேல் ஜனசஞ்சாரமில்லாக்காட்டிற் செய்யப்புகுவதற்கு சிவபுண்ணியத்தை மேற்கொண்டொழுகும் பெரியோர்கள், தத்தமக்கியன்றளவு திரவிய சகாயஞ்செய்தாலன்றி, இச்சிவபுண்ணிய நிறைவேறப்பெறாது. ஆதலால், அறிவுடையோர்க்கு இதுவிஷயமாய் மிகுதியுமெடுத்துச் சொல்லவேண்டியது அவசியமின்மையால் இயன்ற சகாயஞ்செய்யவும், செய்விக்கவுங்கேட்டுக்கொள்ளலாயினேன்.

ஸ்ரீ பிர்மகபால சக்கிரமாயபால் சுவாமிகள்,

சிங்கப்பூர்.